எல்லாம் போலீசாரை அணுகினுல்—அவர்களுடைய பெயர்களை அரசாங்கம் ரகசியமாக வைத்துக்கொண்டால்—பல பேர்கள் வருவார்கள் என்று நினைக்கிறேன், அதைப்பற்றிய கண்டுபிடிப்புகளைச் செய்யக்கூடிய முறை யிலே அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி : தலைவர் அவர்களே, 10 ஆயிரம் ரூபாயை ஒரே நொடியிலே 20 ரூபாயாக ஆக்க வேண்டுமென்று எண்ணு கிறவர்கள் கண்ணியமானவர்கள் பட்டியலிலே வரமாட்டார்கள் (சிரிப்பு).

தொல் பொருள் ஆராய்ச்சி.

9 விஞ. 453.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி—சுற்றுலா துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா ?

தமிழ்நாடு அரசின் தொல் பொருள் ஆராய்ச்சித்துறை இந்த ஆண்டில் எந்தெந்த இடங்களில் தமது ஆராய்ச்சிப் பணியை மேற்கொண்டுள்ளது ?

Archaeological excavations.

* 453 *Q.*—THIRU N. KITTAPPA : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state the places where the department of Archaeology of the Government of Tamil Nadu has undertaken excavation programme?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 1973-ம் ஆண்டு திருச்சி ராப்பள்ளி மாவட்டம் கரூரிலும் மற்றும் ஐயர் மலையிலும் தொல் பொருள் ஆய்வுத்துறை ஆராய்ச்சிப் பணியை நடத்தியுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இந்த ஆராய்ச்சியிலே கண்டுபிடிக்கப்பட்ட குறிப்புகளை வைத்துக்கொண்டு அவை யெல்லாவற்றையும் தொகுத்து புத்தகமாக வெளியிடுவதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்த ஆராய்ச்சிகள் எல்லாம் முடிந்ததற்குப் பின்னுல்தான் அந்தக் கண்டுபிடிப்புகளின் தொகுப்பையெல்லாம் வெளியிட வேண்டும்.

5 விஞ. 454.—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு கல்வி—சுற்றுலா துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா :

மத்திய அரசின் பாதுகாப்பில் இருக்கும் கல்வெட்டுப் படிகளை தமிழ் நாடு அரசின் தொல்பொருள் துறையினரைக் கொண்டு புதுப்பிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப் பொறுப்பு மத்திய அரசிடம் உள்ளது. மாநில அரசு இப்பணியை மேற்கொள்வது குறித்து மத்திய அரசுத் துறைகளுடன் நடத்திய பேச்சு வார்த்தைகள் பலனளிக்க வில்லை.